# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.15.05.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 15.05.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி நாகணம்பட்டி பகுதியில் 1, 2 வார்டு பொதுமக்கள் பயன்படுத்தும் மயானம் ஆக்கிரமிப்பு காரணமாக ஊர் பொதுமக்களால் கம்பி வேலி அமைத்து பராமரிக்கப்படு வருகிறது. மேற்படி மயானத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மேற்படி மயானத்தில் மினி பவர்பம்ப் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் மற்றும் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 113**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோக மெயின் மற்றும் பம்பிங் மெயினில் ஏற்படும் குடிநீர் கசிவை சரி செய்ய நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால், கசிவை உடனுக்குடன் சரி செய்யும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணி பொதுமக்களின் நலன் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 114**

**பொருள் : 3**

தமிழ்நாடு அரசாணை (நிலை)எண்.44/நி.நி(ம)கு.வி(கு.வி1)துறை நாள்.04.05.2020–ன்படி திருமூர்த்தி அணையினை நீராதாரமாக கொண்டு திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம் மூலமாக குடிநீர் வழங்க ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி திட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சியை கூட்டுக்குடிநீர் திட்டத்தில் இணைத்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான நகராட்சியின் (Upfront charges) ஆய்வு முன்பணமாக ரூ.5.00 இலட்சம் செலுத்தக்கோரி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட உருவாக்கம் கோட்டம், மதுரை அவர்களின் கடிதம் க.எண்.140520/கோ.ஒட்டன்சத்திரம் கூ.கு.திட்டம்/வ.அ/2020 நாள்.14.05.2020 கடிதத்தில் கேட்டுக்கொண்டவாறு, மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சியை இணைத்து ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான நகராட்சியின் பங்கீட்டு தொகை (Proportionate cost) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. இந்நகருக்கு பாதாள சாக்கடை திட்டம் அமல்படுத்தும் நிலை உள்ளதாலும், இந்நகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய வேறு நீராதாரங்கள் ஏதும் அருகாமையில் இல்லாத நிலையில்

நகராட்சி பகுதி பொதுமக்களுக்கு சுமார் ஐந்து தினங்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதை கருத்தில் கொண்டும் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சராசரி வழங்கப்பட வேண்டிய 135 LPCD யைவிட குறைவாகவும், ஆண்டு சராசரியாக 50LPCD குடிநீர் வழங்கப்படுவதால், நகராட்சி பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு குடிநீர் தேவையின் அவசியம் கருதி, மேற்படி கூட்டு குடிநீர் திட்டத்தில் நகராட்சியை இணைத்து ஆய்வு பணிகள் மேற்கொள்ள அதற்கான பங்கீட்டு தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று செலுத்தவும், பொதுமக்களின் குடிநீர் தேவையின் அவசியம் கருதி மேற்படி திட்டத்தில் நகராட்சியினை இணைத்து ஆய்வு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 115**

**பொருள் : 4**

நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்கொரோனா தடுப்பு நடவடிக்கையாக சமூக இடைவெளி கடைப்பிடிக்க காந்தி மார்க்கெட்டை இரண்டாக பிரித்து பேருந்து நிலையத்தில் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்தது. வரும் 17.05.2020–ல் ஊரடங்கு முடிவுற்று பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளதால், திண்டுக்கல் மாவட்ட கொரோனா நோய் கண்காணிப்பு அலுவலரால் பேருந்து நிலையத்தில் செயல்படும் மார்க்கெட்டினை மாற்றியமைக்க தெரிவித்ததை தொடர்ந்து, வட்டாட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் துணை ஆட்சியர் ஆகியோர்களின் ஆலோசனைப்படி, சின்னக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்கூடத்திற்கு அருகாமையில் உள்ள காலி மைதானத்தில் மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பகுதியில் மார்க்கெட் ஒரு பகுதியினை பேருந்து நிலையத்தில் இருந்து மாற்றியமைத்து செயல்படும் வகையில் மேற்படி பகுதியில் ஜெ.சி.பி, டோசர், கிட்டாச்சி முதலானவைகளை கொண்டு டிப்பர் லாரி மூலம் மண் பரத்தும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் காந்தி மார்க்கெட்டை உடனடியாக இடம் மாற்றம் செய்யவும், மாற்று இடமாக சின்னக்குளம் மேற்கு பகுதியில் உள்ள மைதானத்தில் நடத்த காந்தி மார்க்கெட் சங்க பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் ஒப்புக்கொண்டபடி, உடன் தயார் செய்யும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 116**

**பொருள் : 5**

நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்கொரோனா தடுப்பு நடவடிக்கையாக சமூக இடைவெளி கடைப்பிடிக்க காந்தி மார்க்கெட்டை இரண்டாக பிரித்து பேருந்து நிலையத்தில் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்தது. வரும் 17.05.2020–ல் ஊரடங்கு முடிவுற்று பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளதால், திண்டுக்கல் மாவட்ட கொரோனா நோய் கண்காணிப்பு அலுவலரால் பேருந்து நிலையத்தில் செயல்படும் மார்க்கெட்டினை மாற்றியமைக்க தெரிவித்ததை தொடர்ந்து, வட்டாட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் துணை ஆட்சியர் ஆகியோர்களின் ஆலோசனைப்படி, சின்னக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்கூடத்திற்கு அருகாமையில் உள்ள காலி மைதானத்தில் மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பகுதியில் மார்க்கெட் ஒரு பகுதியினை பேருந்து நிலையத்தில் இருந்து மாற்றியமைத்து செயல்படும் வகையில் மேற்படி பகுதியில் ஜெ.சி.பி, டோசர், கிட்டாச்சி முதலானவைகளை கொண்டு டிப்பர் லாரி மூலம் மண் பரத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 13.05.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வு செய்யப்பட்டதில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்படி இடம் நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து, பழனி சாலையில் உள்ள சங்கீதா

கிராண்ட் ஹோட்டல் எதிரில் புல எண்.655/2, 654/1, 655/1ஏ மற்றும் 621ஏ/4பி–ல் திரு.கே.சி.பி.சுரேஷ்குமார் என்பவருக்கு சொந்தமான சுமார் 2.86 ஏக்கர் நிலம் தொகை ஏதுமின்றி இலவசமாக பெறப்பட்டது.

மேற்படி இடத்தில் காந்தி மார்க்கெட் ஒரு பகுதி காய்கறிகள் பிரித்து விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் தலைமையில் வருவாய் அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் பேருந்து நிலையத்தில் நடைபெறும் மார்க்கெட்டினை பழனி சாலையில் உள்ள மேற்படி இடத்தில் நடந்த ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, பேருந்து நிலையத்தில் செயல்படும் மார்க்கெட்டினை சங்கீதா கிராண்ட் ஹோட்டல் எதிரில் உள்ள இடத்திற்கு உடன் இட மாற்றம் 17.05.2020 செய்ய தேவையான கீழ்க்காணும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கபட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு அமைத்தல் | 6.70 |
| 2 | செட் அமைத்தல் | 7.00 |
| 3 | கிராவல் மண் பரத்துதல் | 6.50 |
| 4 | இதர பணிகள் | 1.00 |

மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் காந்தி மார்க்கெட்டை உடனடியாக இடம் மாற்றம் செய்யவும், மாற்று இடமாக சின்னக்குளம் மேற்கு பகுதியில் அமைய இருந்த மார்க்கெட்டினை போக்குவரத்து நெரிசல் காரணமாக நிராகரிக்கப்ட்டதை தொடர்ந்து பழனி சாலையில் உள்ள இடத்தில் அமைக்க உடன் தயார் செய்யும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 117**

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் 1 முதல் 18 வார்டு முடிய உள்ள பிராதான மெயின் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி உடன் சரிசெய்யும் பொருட்டு தேவையான பைப் மற்றும் உதிரி சாமான்கள் 2020–2021 ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.

**தீர்மானம் எண் – 118**

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ள பகுதியில் 18 வார்டுகளில் Internal Plumbing அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்புகள் பொதுமக்களுக்கு உடனுக்குடன் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அதனடிப்படையில் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. நகரில் அபிவிருத்தி பகுதிகள் மற்றும் உள் பகுதிகளில் வீடுகளுக்கு அருகே விநியோக மெயின் இல்லாததால் குடிநீர் இணைப்புகள் வழங்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. புதிதாக மெயின் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 119**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையமான விருப்பாட்சியில் Fitter champer அமைக்கப்பட்ட பகுதியில் திறந்தவெளியில் உள்ளது. இதனால் மேற்படி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பி.வி.சி குழாய்கள் அடிக்கடி வெப்பத்தால் வெடித்துவிடுகிறது. ஆகையால், மேற்படி பகுதியில் G.I sheet –ல் ஆன மேற்கூரை அமைத்து அப்பகுதியில் உள்ள Fitter media -ல் உள்ள பொருட்களை மாற்றம் செய்ய நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 120**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்புகளில் முன்பகுதியில் கழிவறை மற்றும் குளியல் அறை முதல் தளத்தில் மேற்கூரை அமைத்தல் மற்றும் நச்சு தொட்டி அமைத்து மராமத்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.70 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 121**

**<u>பொருள் : 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் சி பிரிவு 09.05.2020 உடன் 3 ஆண்டுகள் உரிமம் முடிவடைவதால், வட்டார போக்குவரத்து அலுவலர், திண்டுக்கல் அவர்களிடம் மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க பேருந்து நிலையத்தில் பெயர் பலகைகள் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள நாள்.05.05.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.15.05.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொருள் | எண்ணம் | சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் ரூ. | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | Bus stand In & Out Board Supply & Fixing | No | 15300.00 | 16200.00 | 16500.00 |
| 2 | Bus stand Name Board Supply & Fixing (25x6) | Sqft | 320.00 | 325.00 | 340.00 |
| 3 | Bus stand Name Board Painting & Writing work (25x6) | Sqft | 80.00 | 95.00 | 100.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் மற்றும் பொதுமக்கள்ளின் நலன் கருதி, மேற்படி பணிக்கு சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 122</u>**

**<u>பொருள் : 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் சி பிரிவு 09.05.2020 உடன் 3 ஆண்டுகள் உரிமம் முடிவடைவதால், வட்டார போக்குவரத்து அலுவலர், திண்டுக்கல் அவர்களிடம் மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க பேருந்து நிலையத்தில் உள்ள மின் விளக்குகள் மற்றும் சுவிட்ச் பாக்ஸ் போன்றவைகளை பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள நாள்.05.05.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.15.05.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ. எண் | பொருள் | எண்ணம் | சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் ரூ. | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 50 Wts CFL Lights | No | 880 | 900 | 950 |
| 2 | 1.5 Sqm Wire | M | 18.50 | 19 | 21 |
| 3 | CFL Holder | No | 40 | 45 | 55 |
| 4 | Switch | No | 55 | 60 | 65 |
| 5 | Labour Charge | Labour | 550 | 575 | 600 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் மற்றும் பொதுமக்கள்ளின் நலன் கருதி, மேற்படி பணிக்கு சரவணா பில்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 123</u>**

**<u>பொருள் : 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல்லே 18 வார்டு பகுதி மற்றும் தலைமை நீரேற்று நிலைய மெயின் பைப்லைன்களில் அமைக்கப்பட்டுள்ள கேட் வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் .மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 124</u>**

**<u>பொருள் :13</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2020–21 ஆண்டுக்கான 01.04.2020 முதல் 15.05.2020 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0001 முதல் RF0083 முடிய, WS0001 முதல் WS0008 முடிய மற்றும் TFV001 முதல் TFV009 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**<u>தீர்மானம் எண் – 125</u>**

# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.29.05.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 29.05.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

அரசாணை (நிலை) எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை நாள்.21.05.2020–ம் தேதிய அரசாணையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவையில் விதி எண்.110–ன் கீழ் 19.03.2020–ம் நாளன்று உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் செயல்பாடுகளை கொளரவிக்கும் வகையிலும் அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடவும், அனைத்து துப்புரவு பணியாளர்களும் இனி தூய்மைப் பணியாளர்கள் (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களையும் தூய்மை பணியாளர்கள் என அழைக்கும் பொருட்டு, மேற்படி அரசாணையினை மன்றத்தியால் பதிவு செய்ய தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 126**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 10–வது வார்டு தாராபுரம் சாலை நெடுஞ்சாலையில் உள்ள கிளை சாலைகளில் SNS பேட்டை பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்காலை உயர்த்தி சாலை அமைக்கும் பணிகளுக்கு தொகை ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.79 நாள்.31.03.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.19.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.அய்யாவு | 0.06 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.ரெங்கசாமி | 1.88 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு. ஆர்.அய்யாவு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.06 % குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு 0.06 % விலையில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்தந்ததார் திரு. ஆர்.அய்யாவு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 127**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ரயில் நிலையம் வடபுறம் உள்ள பகுதியில் இருந்து வரும் கழிவு நீர் வடிகாலை ரயில் நிலையம் மேல்புறம் உள்ள குறுக்கு பாலத்திற்கு செல்லுமாறு கழிவு நீர் வடிகால் கட்டும் பணிகளுக்கு தொகை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.80 நாள்.31.03.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.19.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ரெங்கசாமி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | சபரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1.08 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஆர்.ரெங்கசாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.04 % குறைவான விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்தந்ததார் திரு.ஆர்.ரெங்கசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்..

**தீர்மானம் எண் – 128**

**பொருள் : 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12-வது வார்டு உள்ள மின் மோட்டார் மின் இணைப்பு பழுது பணி மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நாள்.13.05.2020–ல் தனிஅலுவலா் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.19.05.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| Sl.No | Items | Qty | HMR Construction, Oddanchatram Rs. | Bala Electricals, Oddanchatram Rs. | .Vijaya Electricals, Oddanchatram Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 |
| 1 | 40 Watts tube (Phillips /Crompton) light fittin | 1 no | 650 | 665 | 660 |
| 2 | 250 Watts Sodium Vapour lamp | 1 no | 895 | 922 | 905 |
| 3 | 250 Watts Sodium choke | 1 no | 1750 | 1796 | 1775 |
| 4 | Condensar | 1 no | 40 | 45 | 43 |
| 5 | 1/ 18 Wire | 1 m | 9.50 | 13 | 12 |
| 6 | G.I Wire | 1 m | 508 | 525 | 520 |
| 7 | 7/20 Aluminium Cable | 1 m | 11 | 15 | 13 |
| 8 | 20 mm GI Pipe | 1 m | 126 | 140 | 135 |
| 9 | Labour Charge | 1 | 4000 | 4250 | 4200 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

3. அனுமதிக்கலாம்.
4. நகராட்சி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு தனி அலுவலா் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 129**

**பொருள் : 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் காளாஞ்சிபட்டி தொட்டியில் இருந்து வரும் மின் இணைப்பை மாற்றியமைத்து பொருத்தும் பணிகள் மேற்கொள்ள நாள்.15.05.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.21.05.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| Sl.No | Items | Qty | HMR Construction, Oddanchatram Rs. | Bala Electricals, Oddanchatram Rs. | .Vijaya Electricals, Oddanchatram Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 |
| 1 | Copper Cable 6 Sqmm | 1 m | 217 | 227 | 225 |
| 2 | 32mm dia PVC pipe | 1 m | 52.50 | 55 | 54.50 |
| 3 | Excavation and Soil refilling labour Charges | 1 | 7000 | 7300 | 7200 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 130**

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் 1 முதல் 18 வார்டு முடிய உள்ள பிராதான மெயின் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளுக்கு உதிரி சாமான்கள் சப்ளை செய்யும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.118 நாள்.15.05.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.28.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 4.02 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.04 % குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு 0.04% விலையில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 131**

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் 18 வார்டுகளில் Internal Plumbing அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்புகள் பொதுமக்களுக்கு உடனுக்குடன் வழங்க ஏதுவாக புதிதாக மெயின் குழாய் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.119 நாள்.15.05.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.28.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.06 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 3.60% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.06 % குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு 0.06% விலையில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 132**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையமான விருப்பாட்சியில் Filter champer அமைக்கப்பட்ட பகுதியில் G.I sheet –ல் ஆன மேற்கூரை அமைத்து அப்பகுதியில் உள்ள Fitter media -ல் உள்ள பொருட்களை மாற்றம் செய்யும் பணிக்கு தொகை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.120 நாள்.15.05.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.28.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.02 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 2.37 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.02 % குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு 0.02% விலையில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 133**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேரு;ந்து நிலையத்தில் உள்ள பழுதாகி உள்ள அம்மா உணவகத்தில் நீராவி கொதிகலன், வால்வுகள் சரிசெய்தல், குளிர்சாதனப்பெட்டி Compresors பழுது பணி, குடிநீர் Plamt புதிதாக நிறுவுதல் மற்றும் சிலிங்க் பேன் பழுது சாரிசெய்தல், அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.76 நாள்.31.03.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.28.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.56% மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 6.79% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.56 % குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு 0.56% விலையில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 134**

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோக மெயின் மற்றும் பம்பிங் மெயினில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.114 நாள்.15.05.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக நாள்.21.05.2020–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.08 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 1.64 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையில் 0.08% குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.08 % குறைவான விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்தந்ததார் திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்..

**தீர்மானம் எண் – 135**

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி Covid-19 காலகட்டத்தில் பொதுசுகாதாரம் பிரிவு தூய்மை பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் சப்ளை செய்யும் பணிகள் மேற்கொள்ள நாள்.14.05.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.20.05.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ.எண் | பொருள் | எண்ணம் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | மதினா அயர்ன் ஒர்க்ஸ், மதுரை | பி.சலீம் அயர்ள் டிரேடர்ஸ், மதுரை |
|---|---|---|---|---|---|
| 1 | தெரு கூட்டுமார் | 1 | 490 | 490 | 475 |
| 2 | கழிவு நீர் வாய்க்கால் கரண்டி | 1 | 500 | 485 | 475 |
| 3 | குப்பை இழுக்கும் தொரட்டி | 1 | 600 | 580 | 575 |
| 4 | மண் வெட்டி | 1 | 460 | 460 | 450 |
| 5 | கடப்பாறை | 1 | 900 | 950 | 900 |
| 6 | கை தகரம் | 1 | 125 | 125 | 120 |
| 7 | தென்னைமார் | 1 | 48 | 48 | 45 |
| 8 | சின்ன மண் வெட்டி | 1 | 320 | 320 | 300 |
| 9 | சின்ன அரிவாள் | 1 | 160 | 155 | 150 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பி.சலீம் அயர்ள் டிரேடர்ஸ், மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு பி.சலீம் அயர்ள் டிரேடர்ஸ், மதுரை நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 136**

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையம் உள்புறம் மற்றும் வெளிபுறங்களில் விளம்பரம் போஸ்டர்கள் ஒட்டியும் பேருந்து நிலையத்தில உள்புறம் அசுத்தப்படுத்தி நடைபாதையில் உள்ள நாற்காலிகள் பழுதாகியுள்ளது. ஆகையால் பேருந்து நிலையத்தில் உள்புறம் மற்றும் வெளிபுறத்தில் வர்ணம் பூச்சு மேற்கொண்டு மராமத்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுமக்களின் நலன் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 137**

**பொருள் : 13**

கொரோனா வைரஸ் நோய் தொற்று உலக அளவில் மிக வேகமாக பரவி வருவதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சி Covid-19 கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் இருக்க தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்து பொருட்கள் கொள்முதல் செய்த செலவினப்பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொருள்கள் விபரம் | செ.சீ.எண்/நாள் | கொள்முதல் விபரம் | நிறுவனம்/ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Gloves | RF62/30.04.2020 | 500 | TNMPP.Ind.co.Service | 78800 |
| 2 | Lysol | RF63/30.04.2020 | 500 | Surya Agency | 88000 |
| 3 | Bleaching Powder | RF63/30.04.2020 | 450KG | Surya Agency | 19700 |
| 4 | PPE Kit | RF65/05.05.2020 | 105 | R.Syed Mohmed APR | 47738 |
| 5 | IEC Stickers / Notices | RF66/05.05.2020 | 55 | R.Syed Mohmed.A.P.R | 43200 |
| 6 | Containment zone | RF67/05.05.2020 | 5 | M.Muthukannan | 175224 |
| 7 | Barricading | RF68/05.05.2020 | 5 | M.Movendran | 57450 |
| 8 | Hire charges for vehicles to carry food, disinfectant materials and other activities related to COVID-19 | RF69/05.05.2020 | | Global Green Energy and Co | 341700 |
| 9 | Containment zone Barricading | RF76/08.05.2020 | 3 | M.Muthukannan | 450000 |
| 10 | Hand Washing (Wash Basin) arrangements and procurements and procurement of Safety materials | RF86/20.05.2020 | 3 | M.Muthukannan | 9952 |
| 11 | Lysol | RF87/20.05.2020 | 2000 | Surya Agency | 415360 |
| 12 | IEC Stickers / Notices | RF88/20.05.2020 | - | M.Muthukannan | 79800 |
| 13 | Others (if any activity related to COVID-19 | RF90/20.05.2020 | Pandhal Food Expenses for night duty sanitary workers | G.Vigneshkumar | 93600 |
| 14 | Bleaching Powder | RF91/20.05.2020 | 2MT | Surya Agency | 94400 |
| 15 | Sodium Hypochloride | RF93/20.05.2020 | 2700 | Jupiter Enterprises | 19116 |
| 16 | Others (if any activity related to COVID-19 | RF95/20.05.2020 | Pandhal Food Expenses for night duty sanitary workers | M.Movendran | 55650 |
| 17 | Containment zone Barricading | RF96/20.05.2020 | 3 | M.Movendran | 60964 |

மேற்கண்ட உபகரணங்கள் மற்றும் மருந்து பொருட்கள் கொள்முதல் செய்தமைக்கான செலவினப் பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோளா வைரஸ் நோய் தொற்று பரவாமல் இருக்க பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி நிறுவனங்களுக்கு பட்டியல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 138**